# இந்தியத் துணைத் தூதரகம்
**யாழ்ப்பாணம்**

**ஊடக அறிக்கை**

## கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா -2020

*கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா இவ்வருடம் மார்ச்* 6-7, 2020 *வரை நடைபெற்றது. இந்த விழாவில் ராமேஸ்வரம், சிவகங்கை, தஞ்சாவூர் ஆகிய இந்திய குருமுதல்வர்கள் உள்ளிட்ட* 2,500*இற்கும் மேற்பட்ட பக்த அடியார்கள் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் தலைமையிலான குழு கச்சதீவில் தங்கி இருந்து இந்தியாவிலிருந்து வருகை தந்த பக்த அடியார்களுக்கான தேவைகளை கவனித்துக் கொண்டது.*

2. *ஆலய வருடாந்த திருவிழா மத பாரம்பரியங்களுடனும் பக்தியுடனும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருவிழா வெற்றிகரமாக முடிந்ததும் இந்திய பக்த அடியார்கள் திருப்தியுடன் திரும்பினர்.*

நிகழ்வின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

*யாழ்ப்பாணம்*

09 *மார்ச்*, 2020